# காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2019-20ம் நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை

௳௳௳

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.615 / க்யூ 1 / 2017 நாள்.20.10.2017 ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.111 / 2017-ன்படி, காஞ்சிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.10.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண். | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம். | 1 | மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம். |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம். | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம். |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, காஞ்சிபுரம். | 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, காஞ்சிபுரம். |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம். | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம். |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், காஞ்சிபுரம். | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், காஞ்சிபுரம். |
| 6 | முதன்மை கல்வி அலுவலர், காஞ்சிபுரம். | 6 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, காஞ்சிபுரம். |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம். | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், காஞ்சிபுரம். |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர், காஞ்சிபுரம். | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருப்பெரும்புதூர் @ ஒரகடம். |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), காஞ்சிபுரம். | 9 | மாவட்ட வன அலுவலர், காஞ்சிபுரம். |
| 10 | திரு. ரா. ஜெயராமன், த/பெ. அ. ராமஜெயம், செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் குவாரி ஒப்பந்த தாரர்களின் நலவாழ்வு சங்கம், எண்.1, முல்லை நகர் பிராதான தெரு, மேற்கு தாம்பரம் 600 045. | 10 | முதன்மை மண்டல பொறியாளர், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை 5 |
| | | 11 | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, காஞ்சிபுரம். |
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம். |
| | | 13 | மாவட்ட சமூக அலுவலக அலுவலர், காஞ்சிபுரம் |
| | | 14 | துணை இயக்குநர், பொது சுகாதார மையப் பொறுப்பாளர், சுகாதாரப் பணிகள், காஞ்சிபுரம் |
| | | 15 | வருவாய் கோட்ட அலுவலர், காஞ்சிபுரம். |
| | | 16 | வருவாய் கோட்ட அலுவலர், மதுராந்தகம். |

காஞ்சிபுரம் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, காஞ்சிபுரம் வங்கிக் கிளையில் வங்கி வணக்கு (கணக்கு எண்.6581717556) துவக்கப்பட்டு, சிறுவகை கனிமங்கள் குவாரி செய்ய அரசுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்காக நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12.01.2015–க்கு முன்னர் 51 சாதாரண கற்குவாரிக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக்கட்டணத்தில் 30 சதவிகித தொகையை கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்திட சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெண்டர் மற்றும் பொது ஏலத்தின் மூலம் எந்த குவாரியும் இல்லை.

Scanned with OKEN Scanner

மேலும், 12.01.2015–க்கு பின்னர் சிறுவகை கனிமங்களாக கிராவல் மற்றும் சவுடு மண் ஆகியவற்றை ஊராட்சி ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகளிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும் இனங்களுக்காக செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 10 சதவிகித தொகை கனிம அறக்கட்டணை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2020 வரை ரூ.10,01,57,062/-ம், மேலும் உயர்நீதிமன்ற உத்திரவின் மூலம் செலுத்தப்படும் அறக்கட்டளை நிதி ரூ.2,30,41,510/-ம், வங்கியில் பணம் இருப்பு வைக்கப்பட்டதற்காக வட்டி ரூ.61,96,976/-ஆக மொத்த வரவு ரூ.12,93,95,548/-இதுநாள் வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்துரூ.1,28,61,525/-செலவழிக்கப்பட்டு தற்போது ரூ.11,65,34,023/- (ரூபாய் பதினொன்று கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து முப்பத்து நான்கு ஆயிரத்து இருபத்து மூன்று மட்டும்) காஞ்சிபுரம் மாவட்ட அறக்கட்டளை வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குவாரிப்பணிகளால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக 91 கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு 2018-2019ம் நிதியாண்டில் நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டது.

2018 – 2019ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட திட்டங்களுக்கு ரூ.60,67,000/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முழுவதும் நிறைவடைந்த இரண்டு திட்டங்களுக்கு ரூ.7,55,000/– மற்றும் சாலைப்பணிக்கான 4 திட்டங்களுக்குரிய தொகையில் முன்பணமாக ஒரு திட்டத்திற்கான

Scanned with OKEN Scanner

தொகை ரூ.10,00,000/– ஆக மொத்தம் ரூ.17,55,000/- ஐ திட்டங்கள் நிறைவேற்றிய துறைக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2019 – 2020ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக கீழ்கண்ட திட்டங்களுக்கு நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டு அரசாணை எண்.213, தொழில் துறை (எம்எம்டி.1) துறை, நாள்.26.12.2019–ன்படி ரூ.5,08,86,000/–க்கு ஒப்புதல் வழங்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத் தும் அமைப்பு | ஒப்பளிப்பு வழங்கப்பட் ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் நலன், சுகாதார மேம்பாடு | மருத்துவ மனைக்கான திட்ட உபகரணங்கள் கொள்முதல். | 95,00,000 | துணை இயக்குநர் (சுகாதாரம்), காஞ்சிபுரம் | 14.02.2020 |
| 2 | சாலைபணி | பினாயூர் திருமுக்கூடல் சாலையிலிருந்து திருமுக்கூடல் கிராமத்திற்கு சாலைக்கான மேம்பாடுகள் | 2,55,86,000 | ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, காஞ்சிபுரம். | 14.02.2020 |
| 3 | திருநீர்மலை அடையாற்றின் குறுக்கே தடுப்புஅணை அமைத்தல் | தாம்பரம் மற்றும் திருநீர்மலைக்கு இணைச்சாலை அமைத்தல் | 1,58,00,000 | செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கீழ்பாலாறு, வடிநிலகோட்டம், காஞ்சிபுரம். | 14.02.2020 |
| | | மொத்தம் | 5,08,86,000 | | |

2019 – 2020ம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக ஒதுக்கப்பட்ட திட்டங்களுக்கு ரூ.5,08,86,000/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முழுவதும் நிறைவடைந்த இரண்டு திட்டங்களுக்கு ஒதுக்கிடு செய்யப்பட்ட தொகையிலிருந்து ரூ.3,92,40,554/- ஐ திட்டங்கள் நிறைவேற்றிய துறைக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2019-2020 நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை மற்றும் மாவட்ட ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

Scanned with OKEN Scanner